**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.160/2020 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.V.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | சின்னு | தொழில் |
| த/பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 18.10.2024**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 22 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. Ex.A.1 - Original Letter given by Sub Registrar certified Sale deed Document No.2289/1964 dated 17.07.1964.
2. Ex.A.2 - Original Letter given by Sub Registrar certified Sale deed Document No.2290/1964 dated 17.07.1964.
3. Ex.A.3 - Online copy of Death Certificate of Kadirvelu dated 21.10.1964.
4. Ex.A.4 - Xerox copy of death Certificate of Annakili dated 06.03.1987.
5. Ex.A.5 - Original Sale deed in favour of Plaintiff Doc.No.2551/1988 dated 24.06.1988.
6. Ex.A.6 - Certified copy of Sale deed Document No.2499/1988 dated 24.06.1988.
7. Ex.A.7 - Original Tax receipt for the joint patta dated 21.06.2006.
8. Ex.A.8 - Original Tax receipt for the joint patta dated 07.12.2007.
9. Ex.A.9 - Certified copy of Power of Attorney 3910/2013 dated 22.04.2013.

10. Ex.A.10 - Xerox copy of Letter of Cancellation dated 14.07.2017.

11. Ex.A.11 - Original Cancelled Power Document No.7648/2017 dated 17.07.2017.

12. Ex.A.12 - Original Tax receipt for the Suit property dated 26.05.2018.

13. Ex.A.13 - Xerox copy of Complaint lodged by Plaintiff dated 15.11.2018.

14. Ex.A.14 - Certified copy of Sale deed Doc.No.1291/1998 dated 30.03.1998.

15. Ex.A.15 - Certified copy of Sale deed Doc.No.1292/1998 dated 30.03.1998.

16. Ex.A.16 - Original Report of Sholinganallur Tahsildar dated 15.04.2019.

17. Ex.A.17 - Xerox copy of Complaint to Commissioner of Police dated 31.07.2019.

18. Ex.A.18 - Original Report of EDF II Team CCB dated 06.08.2019.

19. Ex.A.19 - Xerox copy of Representation to Tahsildar by Plaintiff dated 09.08.2019.

20. Ex.A.20 - Original Field Map Sketch issued by Tahsildar.

21. Ex.A.21 - Online copy of Patta in the name of the Plaintiff.

22. Ex.A.22 - Online copy of Guideline value for Suit Property.

(ஜெராக்ஸ் நகல்களை குறியீடு செய்வதற்கு பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை செய்யப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கின் பொருண்மைகள் தெரியுமா என்றால் தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் Diploma in Automobiles படித்துள்ளேன். இந்த வழக்கை எதற்காக போட்டுள்ளேன் என்றால் என்னுடைய இடத்தை அபகரித்துவிட்டார்கள், அதனால் வழக்கு போட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் ஆமாம். தாவா சொத்தை யாரிடமிருந்து நான் வாங்கினேன் என்றால் தற்போது பெயர் ஞாபகத்தில் இல்லை. தாவா சொத்தை எந்த வருடம் வாங்கினேன் என்றால் 1988ல் வாங்கினேன். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 13900 சில்லரை விஸ்தீரணம் வாங்கினேன். நான் தாவா சொத்தை வாங்கும்போது தாய் பத்திரமும் சேர்த்துதான் வாங்கினேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் வாங்கிய தாய் பத்திரத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. தாய் பத்திரத்தின் நகல் வாங்கினேனா என்றால் வாங்கியதாக ஞாபகமில்லை. அந்த தாய் பத்திரத்தின் நகலைக்கூட இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தமிழ், ஆங்கிலம் படிப்பேனா என்றால் படிப்பேன். நான் எனது வழக்குரையிலேயோ, பிரமாண வாக்குமூலத்திலேயோ தாய் பத்திரம் குறித்து சொல்லியுள்ளேனா என்றால் தாவா சொத்தை துரைராஜ் மற்றும் பல நபர்களிடமிருந்து கிரயம் பெற்றதாக சொல்லியுள்ளேன், அதன் ஆவண எண் 2551/1988 நாள் 24.06.1988 ஆகும். மேற்படி துரைராஜ் யாரிடமிருந்து தாவா சொத்தை வாங்கினார் என்று வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். கதிர்வேலுவின் வாரிசுதாரர்களிடமிருந்து வாங்கியதாக கூறியுள்ளேன். கதிர்வேலுவின் வாரிசுதாரர்களிடமிருந்துதான் தாவா சொத்தை வாங்கினேன் என்று எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. வா.சா.ஆ.1 சான்றிட்ட கிரய பத்திரத்தில் 17.07.1964 என்று தேதி குறிப்பிட்டுள்ளதில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்த இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி வா.சா.ஆ.1 ஆவணத்தை பார்த்து தேதி குறிப்பிடவில்லை என்று கூறுகிறார். வா.சா.ஆ.1ன் நகல் ஆவணத்தை கூட இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.5 கிரய பத்திரம் நான் வாங்கிய கிரய பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 கிரய பத்திரத்தில்

கதிர்வேலு என்பவர் 07.07.1964ம் தேதி ஆவண எண்.2289/1964, துணை சார் பதிவாளர் அலுவலகம், சைதாப்பேட்டையில் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணத்தின் மூலம் வாங்கினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1964ம் ஆண்டிற்கு முன்பே தாவா சொத்தில் லேஅவுட் போட்டிருந்தார்கள் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. வா.சா.ஆ.5 கிரய பத்திரத்தில் கதிர்வேலு 21.10.1964ல் காலமாகிவிட்டார் என்றும், அவரது மனைவி பீவியம்மாள் என்கிற முனியம்மாள் கதிர்வேலு அவர்களின் காலத்திலேயே இறந்துவிட்டார் என்று குறிப்பிடப் பட்டுள்ளது என்றால் சரிதான். பீவியம்மாள் என்கிற முனியம்மாளின் இறப்பு சான்றிதழை தாக்கல˙ செய்யவில்லை என்றால˙ தாக்கல˙ செய்யவில்லை. கதிர்வேலுவின˙ வாரிசு சான்றிதழை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

இந்த வழக்கு சொத்தின் கிழக்கு பக்கம் பிளாட் நம்பர் 176 இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்தின் வடக்கில் 4வது மெயின் ரோடு உள்ளது என்றால் சரிதான், மேற்கில் முதல் தெரு உள்ளது என்றால் சரிதான், தெற்கில் பிளாட் நம்பர் 173 உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை, கிழக்கில் நான் என் மனைவிக்கு வாங்கிய சொத்து உள்ளது என்றால் சரிதான். நான் என் மனைவி பெயரில் வாங்கிய சொத்தின மனை எண்.176 என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு தெற்கு பக்கம் பிளாட் நம்பர் 173 மற்றும் 174 உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.5 கிரய பத்திரம் என்னுடைய கிரய பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5ன் சொத்து விவரத்தில் பிளாட் நம்பர் 21 மற்றும் 22 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5ன் சொத்து விவரத்தில் இந்த வழக்கு சொத்தின் மனை எண் குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் வா.சா.ஆ.5 கிரய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு எல்லைகளின் படி சொல்லவில்லை என்றால் சரியல்ல, சர்வே எண் படிதான் வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.5 கிரய பத்திரம் வழக்கு சொத்து சம்பந்தப்பட்டதில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என் வழக்குரையை வா.சா.ஆ.5 கிரய பத்திரத்தின்படி தாக்கல் செய்துள்ளேன் என்றும், அது வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டதில்லை என்று சொன்னால் தவறாகும். வா.சா.ஆ.9 பொது அதிகார பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்தில் தெற்கில் பிளாட் நம்பர் 21 மற்றும் 22 என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 பொது அதிகார பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்தின் விஸ்தீரணத்தில் கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கத்தில் 90 அடி என்றும், கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கத்தில் 90 அடி என்றும், வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கத்தில் 155 அடி என்றும், வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கத்தில் 156 அடி என்றும், மொத்த விஸ்தீரணம் 13995 சதுர அடி என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ரத்து பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்தின் விஸ்தீரணத்தில்

கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கத்தில் 90 அடி என்றும், கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கத்தில் 90 அடி என்றும், வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கத்தில் 155 அடி என்றும், வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கத்தில் 156 அடி என்றும், மொத்த விஸ்தீரணம் 13995 சதுர அடி என்றால் சரிதான். வா.சா.ஆ.14 2ம் பிரதிவாதி வாங்கிய கிரய பத்திரத்தில், பத்திர ஆவண எண்.2290/1964 நாள் 17.07.1964 ஆவணத்தில் பிளாட் நம்பர் 171, 172 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கிரய பத்திரத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.14 2ம் பிரதிவாதி இளங்கோவன் வாங்கிய கிரய பத்திரத்தில் வடக்கில் 4வது மெயின் ரோடு என்றும், தெற்கில் பிளாட் நம்பர் 172 என்றும், கிழக்கில் மனை எண்.176 என்றும், மேற்கில் முதல் குறுக்கு தெரு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 கிரய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 4 எல்லைகள்தான் வா.சா.ஆ.14 கிரய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 4 எல்லைகள் என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.15 என் மனைவி பெயரில் வாங்கிய கிரய பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 கிரய பத்திரத்தில் மனை எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.15 கிரய பத்திரத்தில் சதுர அடி அளவுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் நானும் என் மனைவியும் கூட்டு பட்டாவாக வாங்கினோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கூட்டு பட்டாவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த வருடம் பட்டாவிற்கு விண்ணப்பித்தேன் என்றால் எந்த வருடம் என்று தற்போது ஞாபகமில்லை. ஆனால் பட்டா கேட்டு விண்ணப்பித்திருந்தேன். இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள என் பெயரிலுள்ள பட்டா வா.சா.ஆ.21 என்றால் சரிதான். வா.சா.ஆ.21 பட்டாவானது 24.02.2016ல் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 26 வருடம் கழித்துதான் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான், ஆனால் பட்டாவை கேட்டு ஏற்கனவே விண்ணபத்திருந்தேன், 2016ல்தான் பட்டா கொடுத்தார்கள். நான் தாசில்தாரிடம் 26 வருடத்திற்கு முன்பு பட்டா கேட்டு விண்ணப்பம் செய்த மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. தாசில்தாரிடம் பட்டா கேட்டு விண்ணப்பித்தபோது என்னென்ன ஆவணத்தை சேர்த்து விண்ணபத்தேன் என்றால் என் பெயரிலுள்ள கிரய பத்திரத்தை சேர்த்து

விண்ணப்பித்தேன். இந்த வழக்கு சொத்தின் முன் உரிமையாளர் துரைராஜ் மற்றும் அவரது வாரிசுதாரா் கதிா்வேல் என்றால் சரிதான். அந்த முன்உரிமையாளரின் விற்பனை பத்திரத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், பட்டாவிற்காக கொடுத்த மனுவிலும் முன்உரிமையாளரின் விற்பனை பத்திரத்தை கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. இந்த வழக்கு சொத்தின் முன் உரிமையாளர் துரைராஜ் மற்றும் அவரது வாரிசுதாரர் கதிர்வேல் பெயரிலுள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர்கள் பெயரில் பட்டா இல்லை. வா.சா.ஆ.16ல் நான் தாசில்தாரிடம் மனு கொடுத்த போது மனுதாரர் முன்னிலையில் சொத்து அளந்து காட்டப்பட்டது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருக்கிற 2ம் பிரதிவாதிக்கு இந்த சொத்தை அளக்கும்போது எந்தவித முன்அறிவிப்பும் கொடுக்கப்பட்டதா என்றால் சொத்தின் உரிமையாளருக்குதான் அறிவிப்பு கொடுப்போம் என்றும், மற்றவர்களுக்கு அறிவிப்பு கொடுக்க மாட்டோம் என்றும் தாசில்தாா் கூறினாா். நான் சொத்தை அளக்கும்போது சொத்தின் சுவாதீனத்தில இல்லை என்றால அப்பொழுது நான அமெரிக்கா சென்றிருந்தேன், அப்பொழுதுதான் சொத்தை ஆக்கிரமித்தார்கள். தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 09.08.2019 தேதியிட்ட வா.சா.ஆ.19 நான் தாசில்தாருக்கு அனுப்பிய அறிவிப்பு என்றால் சரிதான். வா.சா.ஆ.19 அறிவிப்பில் இளங்கோவன் முன்னிலையில் இடத்தை அளந்து தருமாறு கேட்டுள்ளேன் என்றால் அவ்வாறு அறிவிப்பு அனுப்பினேன், தாசில்தாரின் உதவியாளர் என்னிடம் சொத்தின் உரிமையாளருக்கு மட்டும்தான அறிவிப்பு கொடுப்போம என்றும், மற்றவர்களுக்கு அறிவிப்பு கொடுக்க மாட்டோம் என்றும் சொன்னார். அவ்வாறு தாசில்தார் மற்றும் தாசில்தாரின் உதவியாளர் எழுத்து மூலமாக தெரிவித்தாரா என்றால் எழுத்து மூலமாக தெரிவிக்கவில்லை. வழக்கு சொத்தின உரிமையாளா மற்றும சொத்தின சுவாதீனத்தில இருக்கும 1, 2 பிரதிவாதிகளுக்குதான் சொத்தை அளப்பதற்கு முன்பு அறிவிப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அது குறித்து என்னால் சொல்ல இயலாது. நான பட்டா வாங்கும்போது எந்தவிதமான தாய் பத்திரமும் தாக்கல் செய்யாமல் நானும், தாசில்தாரும் சேர்ந்து ஒரு போலியான பட்டாவை தயார் செய்து இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. 06.08.2019 தேதியிட்ட வா.சா.ஆ.18ல் 1, 2 பிரதிவாதிகள் சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதாக மத்திய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார் என்றால் குறிப்பிட்டுள்ளார். வா.சா.ஆ.18ல் 2ம் பிரதிவாதியின் ஆவண எண்.1291/1998 நாள் 30.03.1998 விசாரணையில் தாக்கல் செய்யப்பட்டு, விசாரணையின் இறுதியில் நீதிமன்றத்தின் மூலமாக சொத்தினுடைய உரிமையை நிரூபித்துக் கொள்ளுமாறு முடிக்கப்பட்டது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படிக்கவில்லை. எனது வழக்கறிஞர் 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் விவரங்களை எனக்கு சொன்னாரா என்றால் சொல்லியிருப்பார், தற்போது ஞாபகமில்லை. 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில், 1959ல் இருந்து வழக்கு சொத்திற்கான தாய் பத்திரங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எதிர் வழக்குரையில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. இந்த வழக்கு சொத்தின் மனை எண்.171 மற்றும் 172 என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. என் கிரய பத்திரத்திலோ, என் மனைவி பெயரிலுள்ள கிரய பத்திரத்திலோ மனை எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் என் கிரய பத்திரத்தின் சொத்து விவரத்தில் தெற்குபக்கம் மனை எண்.21 மற்றும் 22 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக லேஅவுட் போட்ட பிறகு தான் மனை எண் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். 1964லேயே இந்த வழக்கு சொத்திற்கான லேஅவுட் போடப்பட்டு மனை எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் நான் மனை எண் போடாமல் அதை மறைத்து பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்திற்கு கிழக்கு பக்கமாக என் மனைவி பெயரில் வாங்கப்பட்ட மனை எண்.176 இடம் என்றால் சரிதான். என் மனைவி பெயரில் வாங்கப்பட்ட மனை எண்176ன் பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. நானோ, எனது மனைவியோ துரைராஜ் மற்றும் அவருடைய வாரிசுகள் கதிர்வேல் ஆகியோர்களிடமிருந்து போலியாக கிரய பத்திரங்கள் தயார் செய்யப்பட்டு, இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றும், நான் போலியான ஆவணத்தை வைத்து இந்த நீதிமன்றத்தில் சொத்தின் உரிமை கேட்டிருப்பது கிடைக்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட

வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் 26.11.2024 வாய்தா தினத்தன்று ஆஜரில் இல்லாததால் வா.சா.1 குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை